# பழைய ஏற்பாட்டில் உள்ள கிறிஸ்து

# ரெவர்ன்ட் டேவிட் கேனிக்

# Christology of the old Testament (Rev. David Koenig)

**அறிமுகம் :**

இந்த பாடத்தில் நாம் கிறிஸ்துவைப் பற்றின சித்திரத்தை பழைய ஏற்பாட்டிலிருந்து பார்க்கப்போகின்றோம் கார்த்தராகிய இயேசுகிறிஸ்து மனித அவதாரம் எடுப்பதற்கு முன்பே பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவாகிய மேசய்யாவைப் பற்றி விவரமாக எழுதப்பட்டிருக்கிறது என்ற விஷயத்தை ஒரு சில வேளைகளில் நாம் மறந்து போகிறோம்.

வேதவாக்கியங்களை ஆராயந்துபாருங்கள்அவைகளால் உங்களுக்கு நித்யஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே'' யோவான் 5:39

இயேசுகிறிஸ்து இந்த வார்த்தைகளைச் சொன்னபோது புதிய ஏற்பாடு எழுதப்படாமலிருந்தது. மேற்கண்ட வசனத்தில் கர்த்தர் பழைய ஏற்பாட்டில் தான் உள்ளதை பேசினார் எம்மாவூர் வழியிலே இரண்டு சீஷர்களிடத்தில் உயர்த்தெழுந்த பின்பு இயேசுவின் சம்பாஷனையை கவனியுங்கள் படியுங்கள்.

அப்பொழுது அவர் அவர்களை நோக்கி தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதய முள்ளவர்களே

கிறிஸ்து இவ்விதமாக பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா என்று சொல்லி, மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்து கான்பித்தார்''

லூக்கா 24:25-27, பழைய ஏற்பாட்டில் உள்ள முதல் ஐந்து புத்தகங்களை பரிசுத்த தேவன் ஆவியினல் ஏவப்பட்ட மோசேயின் மூலம் எழுதினார். அந்நாலிருந்து மோசே மற்றும் மற்ற தீர்க்கதரிசிகளும் பழைய ஏற்பட்டில் உள்ள அவரவர் வேதாகமப் புத்தகத்தில் கிறிஸ்துவைக் குறித்து விவரமாக எழுதினார்கள்.

பரிசுத்த வேதாகமத்திற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். ஆதி 3:15ல் உள்ள முதல் சுவிசேஷ

வாக்குதத்ததிலிருந்து மல்கியா 3:1ல் உள்ள கடைசி சுவிசேஷ வாக்குதத் தங்களையும் குறித்து ஆலோசனைச் செய்யுங்கள். பரிசுத்த வேதாகமத்தில் உள்ள முதல் புத்தகத்திலிருந்து கடைசி புத்தகம் வரைக்கும் அபிஷேகம் பண்ணப்பட்ட கர்த்தராகிய கிறிஸ்துவை மேசய்யாவாக இரட்சிக்கும் தேவனாக நமக்கு கொடுத்தார்.

இந்த பாடமானது பழைய ஏற்பாட்டு சரித்திரத்தில் உள்ள ஏழு மிக முக்கியமான காலங்களிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டிருக்கிறது.

**<u>அவைகள் எவை என்றால்</u>**

1. முற் பிதாக் களுடைய காலம் 2. மோசே மற்றும் யோசுவாவின் காலம் 3. நியாதிபதிகளின் காலம் 4. ஐக்கிய சாம்ராஜ்ஜிய காலம் 5. பிரிந்துபோன இராஜ்ஜியகாலம் 6. சிறையிறுப்பு காலம் 7. சிறையிலிருந்து திரும்பிவந்த காலம். நாம் இந்த ஏழு காலங்களின் சரித்திரத்தையும் பரிசீலனை செய்தால் மேசய்யா வைப்பற்றின ஐந்து வகைப்படான விஷயங்களையும் கிரகிக்க முடியும். அவைகள் என்னவென்றால்.

1. மனுஷ அவதாரம் எடுப்பதற்கு முன்பாக இயேசுகிறிஸ்து கர்த்தருடைய தூதனாக மற்றும் அனேக முறைகளில் வழிகளில் கண்ணுக்கு முன்தோன்றி தரிசனம் கொடுத்தல் 2.தீர்க்கதரிசனங்களில் காணப்படுதல் 3. மாதிரியாக அல்லது வகைப்பாட்டில் 4. மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தில் காணப்படுதல் மற்றும் 5. பாடல்கள் பாகத்தின் மூலம் காணப்படுதல் ஆனால் இந்த பாடத்தில் பழைய ஏற்பாட்டில் உள்ள கிறிஸ்துவைக் குறித்து முழுமையாக நாம் தியானிக்கவில்லை.

ஆனால் அவர் நித்ய தேவனென்றும் மற்றும் வேதாகமம் இரட்சிப்பின் கதையென்றும் நாம் கற்றரிந்து கொள்ளுவதற்கு இந்த பாடம் நமக்கு போதும்.

## 1. முற்பிதாக்களுடைய காலம் (The period of the Patriarchs)

இந்த காலம் இந்த உலகத்தின் சிருஷ்டிட்பிலிருந்து யாக்கோபு குடும்பம் எகிப்துக்கு போகும் வரைக்கும் நடந்தேறினின சரித்திரத்தை நமக்குவிவரிக்கிறது.

- கர்த்தருடைய தூதணானவர் மேசய்யா கண்ணுக்கு முன் தோன்றுதல்
- ஆதி 16:7-14 இஸ்மவேல் பிறப்பதற்கு முன் ஆகாருக்கு காணப்படுதல்
- ஆதி 18:1-2, 9-22 மம்ரேயின் சமபூமியிலே அவர் இரண்டு பரிசுத்த தூதர்களோடு ஆபிரகாமுக்கு காணப்படுதல்

- ஆதி 21:17-18, ஆகார் வனாந்திரத்தில் துக்கித்து அழுது கொண்டிருந்த வேளையில் அவளுக்கு காணப்படுதல்
- ஆதி 22:11-18 மோரியா பர்வதத்தின்மேல் ஆபிரகாமுக்கு காணப்படுதல்
- ஆதி 24:7 ஆபிரகாமின் வேலைக்காரனுக்கு முன்பாக அவர் கர்த்தருடைய தூதனாக சென்றதைக் குறித்து எழுதியுள்ளது.
- ஆதி 31:11-11 கர்த்தருடைய தூதனாக கிறிஸ்து யாக்கோபினுடைய ஆட்டுமந்தைக்களைக் குறித்த கனவில் காணப்படுதல்
- ஆதி 32:24-30-யாக்கோபோடு அவர் போராடுதல்
- ஆதி 48:16- யோசேப்பின் பிள்ளைகளை யாக்கோபு ஆசிர்வதிக்கும் சமயத்தில் கர்த்தருடைய தூதனானவர் இந்த பிள்ளைகளை ஆசிர்வதிப்பாராக என்று சொல்லி ஆசிர்வதித்தல்

<u>**தீர்க்கதரிசனங்களில் வெளிப்படுதல் :-**</u>

ஆதி 3:15 ஸ்தீரியின் வித்தாக பிறப்பார் என்னு சொல்லப்பட்ட முதல் சுவிசேஷ தீர்க்கதரிசனம் ஆதாமுடைய வம்சத்தார் எல்லாருடைய பாவங்களையும் பரிகரிக்க நிவர்த்திசெய்ய வரப்போகிற மேசய்யா இயேசுவே என்பது இதன் அர்த்தம்.

ஆதி 48:8-12 ஆதியாகமத்தின் கடைசி பாகத்தில் அரசாளப் போகிற யூத கோத்திரத்து சிங்கமாக வாரிசுதாரராக செய்யப்பட்டார் அவரே சமாதான கர்த்தர் சமாதானத்தை கொண்டுவருவராக ஷாலோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஆதி12:1-, 15:5-6, 17:4-5, 22:14, 32:12 ஆகிய வாக்குதத்தங்களில் ஆபிராகமின் சந்ததியாக வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறார் அவர் மூலம் பூமியின் சகல ஜனத்தாரும் கோத்திரத்தாரும் ஆசிர்வதிக்கப்படுவார்கள் என்று வாக்குதத்தம் செய்யப்பட்டுள்ளார்.

<u>**பிரதிரூபமாக(அ) மாதிரியாக :**</u>

இந்த பாகத்தில் மேசய்யா எப்படி இருக்கப்போகின்றார் மற்றும் அவர் என்ன செய்யப்பபோகின்றார் என்பது விவரித்து சொல்லப்படுகிறது.

ஆதி 14:17-20 ஷலோம (சமாதானம்) இராஜா மற்றும் மகா உன்னதமான தேவனுடைய பிரதான ஆசாரியன் ஆன மெல்க்கிஷேதக்கு (நீதியான இராஜா) வைப் பற்றி இந்த பாகம் விவரித்துச் சொல்லுகின்றது.

**2 – மோசே மற்றும் யோசுவா காலம் (The Period of mosses and Joshua)**

*இந்த காலக்கட்டங்களில் அவருடைய தரிசனம்:*

*யாத் 3:2-17 எரிகின்ற முட்செடியில் மோசேக்கு தரிசனம் தருதல்*

*யாத் 14:19 அக்கினி ஸ்தம்பதிலும், மேக ஸ்தம்பத்திலும் அவர் தரிசனம் கொடுத்தல்*

*யாத் 23:20-21 அவர் ஜனங்களுக்கு முன்பாக செல்வதாக வாக்குதத்தம் கொடுத்தல்*

*யாத் 32:34 ஜனங்களுக்கு முன்பாக “ என் தூதன்” செல்வான் என வாக்குதத்தம் செய்தல்*

*எண் 20:16 காதேஸ் ஊரில் கர்த்தருடைய தூதனைக்குறித்து ஜனங்களுக்கு அறிவித்தல்*

*எண் 22:22 இஸ்ரவேலரை பியூலாம் சபிக்கவேண்டும்*

*என்று எத்தனித்தபோது அவனை தடுக்கின்ற சமயத்தில்*

*யோவான் 5:13-15 இந்த பாகத்தில் யெகோவா சேனைகளின் தலைவனாக தேவணாக தரிசனம் தறுதல் யோசுவா 2:1-5 போகீமில் அவர் இஸ்ரவேலர் அனைவருக்கும் காட்சியளித்தல்*

***தீர்க்கதரிசனங்களில் :***

*எண் 24:17 அரசாளுபவரை பற்றின வாக்குதத்தம்*

***பிரதிரூபம் (அ) மாதிரியில்***

*உபா 18:15-18 மோசேயைப் போன்ற தீர்க்கதரிசி தீர்க்க தரிசியாக வரப்போகிறார் என்று வாக்குதத்தம்*

*எண் 21:9 மோசேயின் மூலம் வனாந்திரத்தில் உயரே தூக்கப்பட்ட வெண்கல சர்ப்பம் யோவன் 3:14-15 சிலுவையில் தூக்கப்பட்ட இயேசுவின் மாதிரி. வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்கும்போது யோவான் 3:14-15ன்படி வணந்திரத்தில் தூக்கப்பட்ட வெண்கல சர்ப்பம் நிச்சயமாக இயேசு கிறிஸ்து தான் என்று அறிகிறோம் மற்றும் வேறு பாகங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இஸ்ரவேலர்களை கானான் தேசத்துக்கு வழி நடத்திச் சென்ற யோசுவா கூட இயேசுவின் மாதிரியாக இருக்கிறார் மற்றும் எபிரேய பாஷையில் யோசுவா என்ற பதமும், கிரேக்க பானஷயில் இயேசு என்ற பதமும் ஒரே அர்த்தமுடையதாக இருக்கிறது. இவ்விரண்டு பேருக்கும் யெகோவா இரட்சிப்பார் என்று அர்த்தம் சுயமாக பலிக்கு ஆயத்தமான*

ஈசாக்கு கூட இயேசுவின் மாதிரிதான் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

**நியாயப்பிரமாணத்தில் :**

மோசேயின் மூலமாக தேவன் நியாயப்பிரமாண புஸ்தகத்தை தம்முடைய ஜனங்களுக்கு கொடுத்தார். அந்த நியாயப்பிரமாணத்தில் கிறிஸ்து திரும்ப திரும்ப விவரித்துச்சொல்லப்படுவதை நாம் கவனிக்கலாம் இவற்றின் மூலம் பார்க்கும் போது நியாயப்பிரமானம் என்பது அவருடைய வேலையாகவும் அவருடைய நிழலாகவும் இருக்கிறது. எபி 10:1 வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது

கொலே 2:16-17

பஸ்கா –யாத் 12:1-14, லேவி 23 :4-8 பலிகள் எல்லம் அந்த உன்மையான பலியான இயேசுவை குறிக்கிறது.

பிராயசித்த நான் லேவி 16:15-19,23:26-32 சபாத் (அ) ஓய்வு நாள் யாத் 20:8-11 (மத் 11:-11-28)

ஜுப்லிவருஷம் - லேவி 25:8-55

மீட்பின் உறவின் முறை – உபா 25:5-10

**3-நியாதிபதிகளின் காலம் (In the period of Judges)**

நியா 5:23-தெபெராள் தன்னுடைய பாடலில் அவரைக்குறித்து பிரஸ்தாபித்தல்

நியா 6:11-24 கிதியோனிடத்திற்கு வருதல்

நியா 13:3-23 மனோவா மற்றும் அவனுடைய மனைவியினிடத்தில் வருதல்

**4-ஐக்ய சாம்ராஜ்ய காலம் (In the Period of uinted kingdom)**

**இக்காலத்தில் அவர் காட்சிகொடுத்தல்**

சங் 34:7 கர்த்தருடைய தூதன் விடுவிக்கிறவராய் வருதல்

சங் 35:5 இச்சங்கீதத்தில் சங்காரம் செய்பவராக பிரஸ்தாபிக்கப்படுதல்

1 சாமு 29:9 ஆகிஸ் இராஜ தாவீதை அவரோடு ஒப்பீட்டு குறிப்பிடுதல்

2 சாம 14:17 அதிக ஞானமுள்ள தெக்கோவாவூர் ஸ்திரி அவரைப் பற்றி குறிப்பிடுதல்

2 சாமு 19:27 பழையபழமொழியின் மூலம் 2 சாமு 24:16-27 தாவீது இஸ்ரவேல் ஜனங்களை இலக்கம் பார்த்த பின்பு

*1 நாள 21:12 தாவீது இஸ்ரவேல் ஜனங்ளை இலக்கம் பார்த்த பின்பு*

*பிரச 5:6 அவரிடத்தில் நேர்ந்து கொள்ளுகிற வேலையில்*

***<u>தீர்க்க தரிசனங்களின் மூலம்</u>***

*2 சாமு 7:12-16 தாவீதன் வாரிசாக அவருடைய வேலை*

***<u>பிரதிரூபத்தின் மூலம் (மாதிரி)</u>***

*சங் 72 மிகப் பெரிய இராஜாவான சாலமோன் பிரதி ரூபமாக*

**காவிய பாகம் (அ) கீர்த்தனைகளின் (அ) பாடல்களின் பாகத்தில்:**

*யோபு 19:25-27 மீட்டர் இது ஆபிரகாம் காலத்திற்கு உரியதேயாயினும் ஐக்கிய இராஜ்ய காலம் வரைக்கும் இது எழுதப்படவில்லை*

*சங் 2:6 இராஜாவாக ஒப்பிடப்படுதல்*

*சங் 2:7 என்னுடைய குமாரன் எபிரே 1:5*

*சங் 8:4-5 அவருடைய அவதாரம் எபி 2:9*

*சங் 22:1, 7-8, 16-18, 22 அவருடைய பாடுகள்*

*சங் 35:19 யோவா 15:25*

*சங் 41:9 யோவா 13:18*

*சங் 45:6-7 எபி 1:8-9*

*சங் 69:9 குருத்தோலை ஞாயிறு யோவா 2:17*

*சங் 69:21 பெரிய (அ) புனித வெள்ளி மத் 27:34*

*சங் 69:25 எருசலேம் மற்றும் யூதாஸ் குறித்து மத்தே 23:38 அப்போ 1:20*

*சங் 72:8 -11 அவருடைய இராஜ்ஜியம், வசனம் 17 அவருடைய நாமம்*

*சங் 110:1 அவருடைய பரத்துக்கு ஏறுதலில் மத் 22:44*

*சங் 110:4 எபி 5:6-10*

*சங் 118:22 மத் 21:43*

***<u>5. தனித் தனியாக பிரிந்த இராஜ்ஜிய காலம்</u>***

**(In the Period of Divided Kingodom)**

1. *இரா 19:5-6 வனாந்திரத்தில் எலியாவுக்கு காட்சியளித்தல்*
2. *இரா 1:3-4 எலியாவை அகசிய தூதர்களுடன் அனுப்புவதற்கு எலியாவுக்கு காட்சி கொடுத்தல்*

*ஓசியா 12:4-5 அவர் யாக்கோபோடு போராடினதைக் குறித்து இங்கே விவரித்தல்*

*இதர 19:35 அவர் அசரீயரின் பாளயத்தில் 1,85,000 ஆயிரம் பேரை சங்கரித்தல்*

*2 நாளா 32:21 அவர் அசரீயரின் பாளயத்தில் 1,85,000 ஆயிரம் பேரைச் சங்கரித்த வேளையில் தரிசனமாகுதல்.*

*ஏசய் 37:36 அவர் அசரீயரின் பாளயத்தில் 185000 சேரைச் சங்கரித்த வேளையில் தரிசன மாணார் ஏசய் 63:9 தூக்கி சுமப்பவராக தூனாக விவரிக்கப்படுகிறார்*

**தீர்க்கதரிசனங்ளின் மூலம் :**

*ஏசய்யா கிரந்தத்தை ஏசய்யாவின் சுவிஷேசம் என்று சொல்லுவார்கள் ஏனென்றால் ஏசய்யா கிரந்தம் முழுவதும் மேசய்யாவைப் பற்றின விஷயங்களே அதிகமாக எழுதப்பட்டுள்ளன.*

*ஏசய் 2:3-4 வந்து நியாயத்தை நடப்பித்தல் அவருடைய இராஜ்ஜியம்.*

*ஏசய்யா 4:2-6 கிளை அவருடைய ஆளுகை.*

*ஏசய்யா 7:14 கன்னிகை கர்ப்பவதி ஆகுதல்.*

*ஏசய்யா 9:6 மேசய்யா 7ம் வசனத்தில் அவருடை ஆளுகை.*

*ஏசய் 11:1 ஈசாயின் அடிமரத்திலிருந்து ஒரு துளிர்.*

*ஏசய் 11:2-3 மேசய்யா, 3-9 மேசய்யாவின் ஆளுகை.*

*10 மேசய்யா, 11-12 அவருடைய ஆளுகை.*

*ஏசய்யா 22:22 தாவீதின் திறவு கோலின் அதிகாரம்.*

*ஏசய் 27:6 அவருடைய ஆளுகை.*

*ஏசய் 28:16 மேசய்யா.*

*ஏசய் 40:3-5 அவருடைய ஆளுகை 10-11 மேசய்யா.*

*ஏசய் 42:1-4 மேசய்யா மற்றும் அவருடைய ஆளுகை.*

*6-7 மேசய்யா மற்றும் அவருடைய ஆளுகை.*

*ஏசய் 49:6 ஒளி 22-23 அவருடைய ஆளுகை.*

*ஏசய் 52:9 அதிகாரம் முழுவதும் மற்றும் 53 அதிகாரம் வரைக்கும். அவருடைய பாடுகளைக குறித்து.*

*ஏசய் 55:5 அவருடைய ஆளுகை.*

*ஏசய் 60 அவருடைய ஆளுகை.*

*ஏசய் 61:1-9 மேசய்யா மற்றும் அவருடைய ஆளுகை*

**<u>சிறையிறுப்பின் காலம் (The Period of Exile)</u>**

**இக்காலத்தில் அவருடைய தரிசனம்**

*தானி 3:25 28 மூன்று மனிதர்களை காப்பற்றின வேளையில்*

*தானி 6:22 தானியேலை காப்பாற்றுதல்*

***தீர்க்கதரிசனங்களின் மூலம்***

*தனி 9:24 -27 மேசயாவும் அவருடைய வேலையும்*

***பிரதிரூபத்தின் மூலம் (மாதிரி)***

*எசேக் 34:23-24 தாவீதை இராஜாவுடன் ஒப்பிடுதல்*

***சிறையிருப்பிலிருந்து திரும்பவருதல் (The Return)***

**இக்காலத்தில் அவருடைய தரிசனம்**

*சகரியா 1:11 மிருது செடிகளுக்குள் தரிசன மாகுதல்*

*சகரியா 3:1-10 யோசுவா மற்றும் சாத்தனுடன் தரிசன மாகுதல் கூரிய 4:1*

*சகரியா 12:8 தன்னுடைய ஜனங்கள் தன்னோடு இருந்தல் அவர்களுக்கு ஜெபம் மற்றும் மகிமை கொடுப்பது பற்றின வாக்குதத்தம்*

*மல்கியா 3:1 தன்னுயை வருகையைப் பற்றின நிபந்தனை வாக்குதத்தம்*

***தீர்க்க தரிசனங்களின் மூலம்***

*சகரியா புத்தகத்தில் மேசய்யாவைப் பற்றியும் மற்றும் அவருடைய ஆளுகையைப் பற்றியும் விவரமாக எழுதப்பட்டுள்ளது.*

*சகரியா 2:9-12 மேசய்யா மற்றும் அவருடைய ஆளுகை*

*சகரி 3:8-9 மேசய்யா மற்றும் அவருடைய சிலுவைப் பாடுகள்*

*சகரி 6:11-15 மேசய்யா மற்றும் அவருடைய ஆளுகை*

*சகரி 8:7,23 அவருடைய ஆளுகை*

*சகரி 9:9-10 மேசய்யா மற்றும் அவருடைய ஆளுகை*

*சகரி 11:12-13 அவருடைய சிலுவையின் பாடுகள் 2:10 அவருடைய ஆளுகை, யோவா 9:34*

*13:1 அவருடைய ஆளுகை, வசனம் 7 அவருடைய சிலுவை பாடுகள் 26:31*

**பிரதிரூபமாக (மாதிரியாக)**

*சகரி 6:11 யோசுவா மேசய்யாவின் பிரதிரூபமாக உள்ளார்.*

**முடிவான தீர்மானம் :**

இந்த பாடத்தில் பழைய ஏற்பாட்டில் உள்ள கிறிஸ்துவைக் குறித்து முழுமையாக நாம் படிக்கவில்லை இது ஒரு முழுமையான பாடமல்ல இப்பாடங்களை நாம் தியானிக்கின்ற சமயத்தில் இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் உள்ள மேசய்யா என்று நாம் அறிந்துகொள்ள முடியும் (மேசய்யா என்றால் எபிரேய பாஷையில் கிறிஸ்து என்று அர்த்தம் மற்றும் கிரேக்க பாஷையில் அபிசேகம் பண்ணப்பட்டவர் என்று அர்த்தம். சிருஷ்டிப்பு ஆரம்பிப்பதற்கு முன்பே இரட்சிப்பின் திட்டத்தை திரித்துவ தேவன் நிர்ணயித்தார். பழைய ஏற்பாடு எல்லா வற்றிலும் இதைக்குறித்து எழுதப்பட்டு இருக்கிறது. ஆனால் புதிய ஏற்பாட்டில் இது நிறைவேற்றப்படுதல் மற்றும் அவருடைய ஆளுகை இந்த பிரபஞ்சத்திற்கு விரிவு படுத்தப்படுவது பற்றி நாம் பார்க்க முடியும் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு புத்தகமும்கூட ஒன்றோடு ஒன்று சம்மந்தமுடையதாயிருந்து இரட்சிப்பை பற்றின முழு சத்தியத்தையும் மற்றும் அவைகள் நிறைவேற்றப்பட்டதையும் குறித்து தெளிவாக நாம் பாக்க முடியும் பரிசுத்த வேதாகமத்தில் உள்ள புத்தகங்களில் எல்லாம் ஒரு புத்தகத்தில் உள்ள சத்தியங்களை இன்னொரு புத்தகம் பலப்படுத்துகின்றது மேற்சொல்லப்பட்ட வாக்ய பாகங்களை பரிசோதிக்கும்போது இயேசு தீர்க்கதரிசியாக, பிரதான ஆசாரியராக மற்றும் இராஜாவாக பழைய ஏற்பாட்டில் மற்றும் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறார். அவரே முந்தினவரும் பிந்தினவரும் மற்றும் நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமு மாயிருக்கிறார். அவரைக்குறித்து முழுமையாக சாட்சிக் கொடுக்கின்ற வேதவசனங்களை நாம் தியனித்தோம் இந்த பாடம் அவருக்கு மகியையும் நமக்கு ஆசீர்வாகத்தையும் கொடுப்பதாக அவருக்கே பரிபூர்ணமான மகிமையும் கண்டும் உண்டாவதாக. ஆமென்.